[திரு. பெ. பெரியசாமி] [1969 மார்ச் 3

கீழ் இந்தக் கடனை விவசாயிகளுக்குச் செய்துகொடுத்தால்தான் இந்த மாவட்டத்து மக்களுக்கு பலன் கிடைக்க வழி இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் பலர் கைத்தறித் தொழிலை நம்பியிருக்கிறார்கள். தற்போது அந்தத் தொழிலில் நெருக்கடி ஏற்பட்டு, ஜவுளித் தேக்கமடைந்திருக்கிறது. மேலும், விசைத்தறியின் போட்டியும், மில் துணியின் போட்டியும் இருக்கிற காரணத்தால் கைத்தறி நெசவுத் தொழில் மிகப் பயங்கரமான சூழ்நிலையில் இருந்து வருகிறது. ஆகவே, கைத்தறித் தொழிலுக்கு கரைபோட்ட வேஷ்டியையும், கலர்ப் புடவையையும் ஒதுக்கித் தந்தால்தான் அந்தத் தொழிலுக்கு நிரந்தர பரிகாரம் கிடைக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சேலம் மாவட்டத்தில் தண்ணீர் பஞ்சம் அதிகமாக இருப்பதால் விவசாயிகள் நெல் பயிர் செய்ய முடியாமல் இருக்கிறது. பெரும்பாலானவர்கள் மானாவாரிப் பயிராக குச்சிக்கிழங்கு பயிர் செய்கிறார்கள். ஒரு ஏக்கரில் ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய் வருகிற காரணத்தால் இதைப் பயிர் செய்கிறார்கள். மில்களில் இந்தக் கிழங்கை அரைத்து, பாகு காய்ச்சி, பசை செய்து நெசவுக்கும் மற்றவற்றிற்கும் பயன்படுத்துகிறார்கள். அண்டை மாநிலங்களில் ஜவ்வரிசியாகவும் இதைப் பயன்படுத்துகிறார்கள். இந்தத் தொழிலுக்கு ஆதரவாக, மில்களை ஏற்படுத்துவதற்குச் சர்க்கார் கடன் உதவி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது மாவட்டத்து விவசாயிகள் ஏழைகளாகவும், இரண்டு ஏக்கர், நான்கு ஏக்கர், ஐந்து ஏக்கர் வைத்திருக்கும் விவசாயிகளாகவும் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்குக் கிணறு வெட்டுவதற்காக இரண்டாயிரம் ரூபாயை மானியமாகவும், ஐந்தாயிரம் ரூபாயைக் கடனாகவும் கொடுத்து உதவினால், ஏழை விவசாயிகள் இந்த அவையை என்றென்றைக்கும் மறக்க மாட்டார்கள் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதே போல தொழில் துறையை எடுத்துக் கொண்டால் — அங்குள்ள மக்கள் முன்னேறுவதற்கு பெரிய தொழில் எதுவும் கிடையாது. ஜவ்வரிசித் தொழிலுக்கு சர்க்கார் உதவி அளிக்கக் கடன் கொடுத்து உதவ வேண்டும். பெரும்பாலான விவசாயிகள் அதில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதனால் ஏராளமான விவசாயிகள் பிழைக்க ஏதுவாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்வது எல்லாம் பஞ்ச நிலையில் இருக்கக் கூடிய அந்தப் பகுதிக்கு இதுபோல உதவி செய்வது மிகவும் ஆக்கமாக இருக்கும் என்று சொல்லி, நமது சர்க்கார் இத் திட்டத்திற்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவோடு முடிவுறுகிறது. நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

7. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. Statutory Rules and Orders.

'Nil'

B. Reports, Notifications and Other papers.

* 56. Demands for Grants and Detailed Budget Estimates for 1969–70 (in three volumes).

* 57. Statement of Posts and Scales of Pay.

1969 மார்ச் 3]

* 58. Detailed Irrigation Budget.

* 59. Introduction to Budget (English and Tamil).

* 60. Detailed Public Works Budget.

* 61. Government Commercial Undertakings.

@ 62. Detailed Budget Estimates of Revenue for 1969–70.

@ 63. Budget Memorandum (English and Tamil).

@ 64. Notice of Demands (English and Tamil).

@ 65. Annual Financial Statement (English and Tamil).

@ 66. The Budget Speech of the Hon. Minister for Finance (English and Tamil).

@ 67. Appendices to Budget Speech (English and Tamil).

@ 68. Plan Supplement (English and Tamil).

@ 69. Plan Review (English and Tamil).

* 70. Fourth Five-Year Plan (1969–74).
Draft outline (English and Tamil).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

* Despatched to Members on 26th February 1969

@ Placed on the Table of the House on 1st March 1969.